# தமிழ் மஞ்சரி

(2024-2025ஆம் கல்வியாண்டில் சேர்வோர்க்குரியது)

## முதலாமாண்டு - இரண்டாம் பருவம்




முனைவர் த.கீதாஞ்சலி

உதவிப்பேராசிரியர்

தமிழ்த்துறை

நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி (தன்னாட்சி)

பொள்ளாச்சி - 642 001

# தமிழ் மஞ்சரி

(2024 - 2025 ஆம் கல்வியாண்டில் சேர்வோர்க்குரியது)

முதலாமாண்டு - இரண்டாம் பருவம்


முனைவர் த.கீதாஞ்சலி

உதவிப் பேராசிரியர்

தமிழ்த்துறை

நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி (தன்னாட்சி)

பொள்ளாச்சி - 642 001



**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**

41–பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,

அம்பத்தூர், சென்னை– 600 050.

☎: 044 - 26251968, 26258410

# பொருளடக்கம்


## I. செய்யுள் பகுதி

1. கலிங்கத்துப்பரணி - இராச பாரம்பரியம்
   - ஜெயங்கொண்டார் 11
2. அழகர் கிள்ளைவிடு தூது
   - பலபட்டடை சொக்கநாதபிள்ளை 16
3. முத்துக்குமாரசுவாமி பிள்ளைத் தமிழ்
   - குமரகுருபரர் 19
4. அபிராமி அந்தாதி
   - அபிராமி பட்டர் 22
5. தேவாரம் - ஆறாம் திருமுறை - திருமறைக்காடு
   - திருநாவுக்கரசர் 24
6. நாலாயிர திவ்யப் பிரபந்தம் - முதல் திருமொழி
   - பெரியாழ்வார் 27
7. தஞ்சை வெள்ளைப் பிள்ளையார் குறவஞ்சி 29
8. நந்திக் கலம்பம் 32

## II. உரைநடை

1. தீயினை நயந்தான் - அ.ச.ஞானசம்பந்தன் 35
2. புறநானூற்றில் பொதுவியல் திணை - முனைவர் அ.மகபுபூ 42
3. பதினெண்கீழ்க்கணக்கு காட்டும் அறிவியல் - முனைவர் ம.சித்ரகலா 50
4. ஆய்வு நோக்கில் சூளாமணி - முனைவர் க.தனலட்சுமி 56
5. 'எழுத்து' புதுக்கவிதையின் வெற்றிக்கொடி - சிற்பி பாலசுப்பிரமணியம் 60
6. தமிழர்களின் பாரம்பரிய வழிபாட்டு விழாக்கள் - முனைவர் ந.ஜெயசுதா 68
7. தமிழில் கல்வெட்டியல் - முனைவர் ந.பிரகாஷ் 73
8. வைணவச் சிந்தனைகளில் திருமங்கையாழ்வார் - பேரா.ரா.சூர்யா 79

## III. இலக்கணம்

சொற்றொடர்

1. தொகை நிலைத்தொடர் 86
2. தொகா நிலைத் தொடர் 90

# 7. தமிழில் கல்வெட்டியல்

- முனைவர் ந.பிரகாஷ்

கல்வெட்டுக்கள் காலத்தின் கண்ணாடி போன்றது. கல்வெட்டுக்கள் ஒவ்வொரு காலத்திலும் நடந்த சமூக மாற்றங்கள், சமய வாழ்க்கை, அரசியல் எழுச்சி, நீதி பரிபாலனம், பொருளாதாரம், எலவை, உகவை (துயரம், மகிழ்ச்சி) சமூக ஒப்பந்தங்கள், வரிவிதிப்பு எனப் பல்வேறு துறைகளைப் பற்றிய செய்திகளைத் தாங்கி நிற்பவை. (சில கட்டுவெட்டுக்கள் செய்யுள் வடிவிலும் அமைந்துள்ளன. சில கல்வெட்டுக்கள் வட்டார வழக்கினையும் தாங்கி நிற்கின்றன). தமிழ், வடமொழி, தெலுங்கு, கன்னடம், ஆங்கிலம், சீனம் ஆகிய மொழிகளிலும் கல்வெட்டுக்கள் அமைந்துள்ளன. கல்வெட்டுக்கள் மொழியியல் ஆய்வுக்குப் பெரிதும் பயன் படுகின்றன.

## கல்வெட்டின் அமைப்பு

கல்லில் எழுத்துக்களைப் பொறிக்கும் வழக்கம் மிகப் பழங்காலந்தொட்டே தமிழகத்தில் நிலவி வந்துள்ளது. தொல்காப்பியம், புறநானூறு, அகநானூறு போன்ற நூல்களிலிருந்து போரில் வீரமரணம் எய்திய வீரர்களுக்கு நடுகல் நட்டு வழிபடும் பழக்கமும் அந்நடுகற்களில் அவர்களுடைய வீரச் செயல்களைப் பற்றி பொறிக்கும் பழக்கமும் தமிழகத்தில் தொன்று தொட்டு இருந்துள்ளது என்பது தெளிவாகிறது. அதற்குச் சான்றாக வீர மரணம் எய்திய போர் வீரனைப் பற்றிக் குறிப்பிடும் நடுகற்கள் ஏராளமாகக் கிடைத்துள்ளன. தமிழகத்தில் கிடைக்கப் பெற்றுள்ள கல்வெட்டுகளாயினும் செப்பேடுகளாயினும் ஒவ்வொன்றையும் ஐந்து பகுதிகளாகப் பிரித்துவிடலாம். அவை மங்கலவாசகம், சாசனம் எழுதப்பட்ட காலம், சாசனச் செய்தி, கையெழுத்துக்கள், ஓம்படைக் கிளவி என்பனவாகும்.

## மங்கலச் சொல்

மங்கலவாசகம் கல்வெட்டின் தொடக்கத்தில் பொறிக்கப்பட்டிருக்கும். பெரும்பாலான கல்வெட்டுக்களில் "மங்கள முண்டாகட்டும்" என்ற சொல்தான் காணப்படுகிறது. வேறுசில ஆரம்பச் சொற்களும் உள்ளன. பல்லவர் காலச் செப்பேடுகள் சிலவற்றில் "ஜிதம்பகவதா" என்ற சொல் காணப்படுகிறது. ஆய் மன்னன் அளித்த திருப்புறச் செப்பேடு "நமோ நாராயணாய" என்று ஆரம்பிக்கிறது. மற்றொரு ஆய் மன்னனின் பாலியத்துச் சாசனம் "ஓம் ஸ்வஸ்திஸ்ரீ" என்று ஆரம்பிக்கிறது. கி.பி 16-ஆம் நூற்றாண்டிலிருந்து இன்னும் வேறுசில சொற்களும் உபயோகப்படுத்தப்பட்டுள்ளன. "அருளிச்செயல்" "ஹரி நன்றாக குருவே துணை" "ஹரிசுபமஸ்து" "சிவமயம்" - ஆகியவைகளாகும்.

இதன்பின்னர் ஒரு சில கல்வெட்டுக்களில் மங்கலத் தொடரை அடுத்து ஆண்டவனது அருளை வேண்டும் சுலோகங்கள் சிலவும் காணப்படுவதாக கல்வெட்டியல் அறிஞர் நடன. காசிநாதன் குறிப்பிடுகிறார். அதன்பின்னர் எம்மன்னன் கொடையளிக்கிறானோ அம்மன்னனின் முன்னோர்களைப் பற்றிய

புராண மரபையும், உண்மை வரலாறுகளையும் காணமுடிவதாகவும் குறிப்பிட்டு எழுதியுள்ளார்.

**கல்வெட்டின் காலம்:-**

கல்வெட்டு கொடையளித்த காலத்தில் ஆட்சிபுரிந்த மன்னனையும் அம்மன்னனது ஆட்சி ஆண்டும் ஒரு சில சமயங்களில் அதற்கு ஈடான சகவருடத்தையோ அல்லது கொல்லம் ஆண்டையோ சேர்த்தும் குறிக்கப்பெற்றிருக்கும். சோழர் கல்வெட்டுக்கள் அரசனது பெயரையும் ஆண்டையும் குறிக்கும் முன்னர் மெய்க்கீர்த்தி என்ற ஒன்றை (முதலாம் இராசராசன் காலத்திலிருந்து) சேர்ந்துள்ளதையும் காண முடிகிறது. அம்மெய்க்கீர்த்திகளில் அரசனின் வீரச்செயல்கள் வரிசைப்படுத்திக் கூறப்பட்டு இருக்கும். மெய்க்கீர்த்தியைக் கொண்டே இது இன்ன அரசனைச் சார்ந்த கல்வெட்டு என்று எளிதில் கண்டுபிடித்து விடலாம். அம்மன்னனின் பட்டத்தரசி யார் என்பதையும் சில மன்னர்களின் மெய்க்கீர்த்திகள் தெரிவிக்கின்றன. சோழ மன்னர்கள் வீரராசேந்திரன், அதிராசேந்திரன், முதலாம் குலோத்துங்கன், விக்கிரமசோழன், இரண்டாம் குலோத்துங்கன் அவனுக்குப் பின் வந்தவர்கள் ஆகியவர்களின் மெய்க்கீர்த்திகள் அவர்களின் பட்டத்தரசிகளோடு "செம்பொன் வீரசிம்மாசனத்தில்" வீற்றிருந்ததைத் தெரிவிக்கின்றன.

**கல்வெட்டின் நோக்கம்:-**

அடுத்து கல்வெட்டில் பொறிக்கப்பெற்ற காரணத்தை விளக்கும் பகுதி காணப்படும். பெரும்பாலான கல்வெட்டுக்களில் கோயில்களுக்கு நிலம் தானமாக வழங்கியதையோ அல்லது கோயில்களில் திருநொந்தா விளக்கு அமைப்பதற்கு "சாவாமூவாப் பேராடு, பசு அல்லது எருமை" கொடுத்ததையோ தான் குறிக்கின்றன. நிலம் கோயிலுக்கு விற்கும் பொழுதாயினும் சரி, பிறரொருவருக்கு விற்பதாயினும் சரி அந்நிலத்தின் பரப்பளவு, அதன் நான்கு பக்க எல்லைகள், அந்நிலத்தைச் சார்ந்திருக்கும் பிறபொருட்கள், அந்நிலத்திற்கு நீர்பாய்ச்சும் வாய்க்கால் ஆகியன விரிவாகக் குறிக்கப்பட்டிருக்கும்.

"இந்நாற்பாற் கெல்லைக்குட்பட்ட உண்ணிலம் ஒழிவின்றி"

"உடும்போடு ஆமை தவழும் இடம்" அனைத்தும்

"கீழ்நோக்கிய கிணறும், மேல் நோக்கிய மரமும், மீன்படு பள்ளமும் தேன்படு பொதும்பும், புற்றும் தெற்றியும்" ஆகிய எல்லாம் விற்கப்பட்டன என்று குறிக்கப் பெற்றிருக்கும் சில இடங்களில் நிலத்தின் பெயரும் குறிக்கப்பெற்றிருக்கும்.

கல்வெட்டின் எழுத்து வகைகள்

1. தமிழி எழுத்துக்கள்
2. வட்டெழுத்து
3. கிரந்த எழுத்து
4. தமிழ் எழுத்து

என கல்வெட்டுக்களில் பொறிக்கப்பெற்ற எழுத்துக்களின் வகைகளை நான்கு வகையாகப் பிரிக்கலாம்.

## தமிழி எழுத்துக்கள்

தமிழகத்தில் கிடைத்துள்ள மிகத் தொன்மையான எழுத்துக்களே தமிழி எனப்படுகிறது. இந்தியாவின் வட பகுதியில் மௌரியப் பேரரசன் அசோகனின் காலத்தில் தொடங்கி சில காலம் வழக்கிலிருந்து பிற இந்திய எழுத்துக்களாகப் பரிணமித்த எழுத்துக்களைப் பிராம்மி (பம்மி) என்பர். தமிழகத்தின் வடபகுதியிலிருந்து தென்பகுதி வரை பல இடங்களில் தமிழி எழுத்துக்கள் கிடைத்துள்ளன. கல்லிலும், பானை ஓடுகளிலும், காசுகளிலும் கிடைத்துள்ளபடியால், ஒரு குறிப்பிட்ட சமயத்தாரால் மட்டும் வழங்கப்பட்டது என்று இல்லாமல் எல்லாப் பிரிவினராலும் வழங்கப்பட்டது என்று கொள்ளல் தகும். தமிழ்நாட்டில் வழங்கிய எழுத்து ஆதலின் வடமொழியில் இதை தமிழி என்றழைத்தனர். இவ்வெழுத்துக்களை பண்டைய தமிழ் என்றே கூறல் தகும். ஆயினும் தமிழ் எனில் இன்றைய தமிழே நம் கண்முன் தோன்றும். தமிழகத்தில் விளங்கிய பண்டைய தமிழ் எழுத்துக்களைப் பிராகிருத மொழியினர், தமிழி, திராவிட என்று அழைத்தனர். சிலர் இவை குகைகளில் மட்டும் காணப்பட்டதால் ‘லேனா எழுத்துக்கள்’ என்றும் கூறினர். ‘லேனா’ எனின் குகையைக் குறிக்கும். அண்மையில் திரு ஐராவதம் மகாதேவன் அவர்கள் இதற்கு தமிழ் - பிராம்மி என்று பெயர் கொடுத்திருக்கிறார். முன்னர் கூறியபடி இவை தமிழ் எழுத்துக்கள்தான். ஆயினும் இன்றுள்ள தமிழிற்கு முன்னோடியாகத் திகழ்ந்தன என்பதைக் குறிக்க ஒரு பெயர் தேவையாயின் இப்பெயரிட்டு வழங்கினார் என அறியமுடிகிறது.

## தமிழ் எழுத்து

கி.பி. மூன்றாம் நூற்றாண்டிலிருந்து ‘தமிழி’ எழுத்துக்கள் வழக்கத்திலிருந்து வந்தன என்றும் அவ்வெழுத்துக்களில் எளிதில் அறியக்கூடிய சில உருவமாற்றங்கள் காணப்படுகின்றன. இம்மாற்றங்கள் இரண்டு பிரிவைத் தோற்றுவிக்கும் வகையில் காணப்படுகின்றன. ஒன்று தமிழ் என்று அழைக்கப்படும். எழுத்துக்களின் தொடக்கத்தையும் மற்றது வட்டெழுத்து என்று அழைக்கப்படும் எழுத்துக்களின் தொடக்கத்தையும் காட்டுகின்றன என்றும், இருவகை எழுத்துக்களும் ஒரே கல்வெட்டில் காணப்படுகின்றன என்றும் பேரா. இரா. நாகசாமி குறிப்பிட்டுள்ளார்.

ஆதலின் கி.பி. 3-ஆம் நூற்றாண்டில் இருந்து தமிழ்மொழியை எழுத இருவகை எழுத்துக்கள் வழக்கத்தில் இருந்தன. ஒன்று தமிழ் என்றும் மற்றொன்று வட்டெழுத்து என்றும் கூறுவர். இதற்குச் சான்று அறச்சலூர் கல்வெட்டு ஆகும். எழுத்துக்களுக்கு அழகு அளிப்பதற்காக சில வடிவங்களில் தலையில் முதலில் கோடு இடப்பட்டது, இதன் பயனாய் எழுத்துக்கள் படிப்படியாய் மாற்றம் பெறுகின்றன. இது தவிர கல்லில் எழுதுவதற்கும் ஓலையில் எழுதுவதற்கும் வேறுபாடு உண்டு.

அறச்சலூர் கல்வெட்டில் தலையில் குறுக்கே இடப்பட்ட கோடுகளைக் காணலாம். அறச்சலூர் கல்வெட்டு தமிழும் வட்டெழுத்தும் கலந்து எழுதப் பட்டது. கி.பி. 7-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆண்ட பல்லவ மன்னன் மகேந்திரன் காலக் கல்வெட்டு செங்கல்பட்டு அருகில் வல்லம் என்னும் இடத்தில்

கிடைக்கப்பெற்றது இது முழுவதும் தமிழில் உள்ளது. இருப்பினும் தமிழி எழுத்து நிலையிலிருந்து வளர்ந்த நிலையை இது காட்டுகிறது என்று பேரா. நாகசாமி குறிப்பிடுகிறார்.

பல்லவர் காலத்தில் சிம்ம விஷ்ணு மகேந்திரன் முதல் நரசிம்மன் நந்திவர்மன், நிருபதுங்கன், அபராஜிதன், கம்பவர்மன் ஆகிய மன்னர்களின் ஆட்சிக்காலத்தைச் சேர்ந்த தமிழ்க் கல்வெட்டுகள் கிடைத்துள்ளன.

**வட்டெழுத்துக்கள்:-**

தமிழகத்தில் தமிழ் மொழியை எழுதுவதற்கு வழங்கிய வட்டவடிவமான ஒருவகைத் தமிழ் எழுத்துக்களை வட்டெழுத்து என்பர். கி.பி. 13-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த ஒரு கல்வெட்டில் இவ்வெழுத்து “வட்டம்” என்று அழைக்கப்பட்டுள்ளது. திருக்குற்றாலத்து குற்றாலநாத சுவாமி கோயிலில் உள்ள ஒரு கல்வெட்டிலிருந்து புரிந்து கொள்ள முடியாத வட்டம் நீங்கலாக மற்ற எல்லா கல்வெட்டுகளும் திரும்பவும் சுவரில் எழுதப்பட்டன என்று அறிகிறோம். இவற்றிலிருந்து இவ்வெழுத்தை அக்காலத்தார் வட்டம் என அழைத்தனர். இவ்வெழுத்துக்கள் மலையாள நாட்டில் மிக அண்மைக்காலம் வரை வழங்கி வந்தது. இதற்கு ‘தெக்கன் மலையாளம்’ என்றும் பெயர் உண்டு.

வட்டெழுத்தின் தோற்றத்தைப் பற்றி பல்வேறு கருத்துக்கள் இதுகாறும் நிலவி வந்தன. திரு டி.ஏ. கோபிநாதராவ் அவர்கள் வட்டெழுத்தும் பிராமி எழுத்திலிருந்தே வளர்ச்சி பெற்றது என்று கூறியுள்ளார். இவர் பிராமி என்று குறிப்பிடுவது தமிழகத்தில் பழமையான குகைகளில் காணப்படும் தமிழி எழுத்துக்களையேயாகும். வட்டெழுத்து என்பது பினீஷியன் எழுத்திலிருந்து உருவாகியிருக்க வேண்டும் என்றும் அசோகன் பிராம்மியிலிருந்து இவை வேறு ஆனவை என்றும் டாக்டர் பர்னல் கூறியுள்ளார்.

வடமொழி தமிழகத்தில் பரவுவதற்கு முன்னரே வட்டெழுத்து வழக்கிலிருந்த தால் பிராம்மியிலிருந்து இது வளர்ந்தது என்னும் கருத்து ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் இவர் கூறியுள்ளார்.

டாக்டர் பூலர் “வட்டெழுத்து தமிழினுடைய ஒரு மாறுபட்ட வடிவம் தான். மராட்டியர்கள் எவ்வாறு ‘மோடி’ எழுத்தைப் பயன்படுத்தினரோ அவ்வாறு வியாபாரிகள் மட்டும் பயன்படுத்தும் எழுத்தாக இது இருந்தது என்றும் கூறியுள்ளார்.”

இதுகாறும் வட்டெழுத்தில் காலத்தால் முற்பட்டதாகக் கருதப்பட்டது. செஞ்சியின் அருகில் திருநாதர் குன்று என்ற இடத்தில் கிடைத்த கல்வெட்டாகும். இது கி.பி. 5-ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகக் கருதப்பட்டது. ஆனால் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட பல கல்வெட்டுகள் இதனைக் காட்டிலும் தொன்மையானவை. இவற்றில் பலவற்றைக் கவனித்தால் இவை தனி வட்டெழுத்தில் எழுதப்படவில்லை. வட்டெழுத்தும் தமிழும் கலந்தே எழுதப்பட்டுள்ளன. ஆதலின் தொடக்கத்தில் வட்டெழுத்தும் தமிழும் கலந்தே எழுதப்பட்டன என்பது தெளிவாகிறது. இதன் அடிப்படையில் காணும்போது அறச்சலூரில் உள்ள கல்வெட்டு இரு எழுத்துக்களின் தொடக்கத்தையும் காட்டுகிறது. இரண்டும் ஒரே கல்வெட்டில் கலந்தே எழுதப்பட்டுள்ளமையும் இங்குக் காணமுடிவதாகவும்

ஆதலின் வட்டெழுத்து கி.பி. 3-ஆம் நூற்றாண்டிலிருந்து தமிழகத்தில் வழக்கிலிருந்து வந்தது என்று பேரா.இரா.நாகசாமி உறுதியாகக் கூறுகிறார்.

வட்டெழுத்துக்கள் பாண்டிய நாட்டில் சிறப்பாக வழங்கியது என்றும் மலையாளப் பகுதிகளில் அண்மைக்காலம் வரை சிறப்புற்றிருந்தது என்றும் முன்னர் கூறினோம். ஆதலின் தமிழகத்தின் தென்பகுதியில் தோன்றியிருக்க வேண்டும் என்றும் அங்குதான் வழக்கிலிருந்தது என்றும் கருத்து நிலவியது. ஆனால் பல அண்மைக்கால கண்டுபிடிப்புகளிலிருந்து தமிழகத்தின் வடபகுதியில் வடஆற்காடு, தென்ஆற்காடு, செங்கல்பட்டு, தருமபுரி, கோவை முதலிய மாவட்டங் களில் (அதாவது பண்டைய கொங்குநாடு, கங்கபாடி, பெரும்பாணப்பாடி, தொண்டை மண்டலம்) ஆகிய பகுதிகளில் பரவலாக இவ்வெழுத்துக்கள் வழக்கிலிருந்தது என்று அறிகிறோம். காலத்தால் தொன்மையான வட்டெழுத்துக் கல்வெட்டுகள் அனைத்தும் தமிழகத்தின் வடபகுதியில் தான் பெருமளவு கிடைத்துள்ளன.

கி.பி. 6-ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 8-ஆம் நூற்றாண்டு வரை பல்லவர்களின் பல கல்வெட்டுகள் வட்டெழுத்தில் கிடைத்துள்ளன. பாண்டிய நாட்டில் ஏழாம் நூற்றாண்டிலிருந்து வட்டெழுத்துக் கல்வெட்டுகள் கிடைக்கின்றன. கி.பி. 8, 9-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பாண்டியர்களது செப்பேடுகள் அனைத்தும் வட்டெழுத்தில் உள்ளன. செப்பேடுகள் அரசனால் அளிக்கப்பட்டவை. ஆதலின் வட்டெழுத்து பாண்டியர் அவையில் சிறப்புற்றிருந்தது என்பது தெளிவாகிறது.

**கிரந்த எழுத்துகள்:-**

தமிழ்நாட்டில் வடமொழியை எழுத தொன்று தொட்டு வழங்கிய எழுத்தைக் கிரந்தம் என்பர். வடமொழியில் கிரந்தம் என்றால் நூல் என்று பொருள். ஆதலின் வடமொழியை எழுத வழங்கிய எழுத்தையும் கிரந்தம் என்றனர். முதன் முதலில் இப்பெயர் எப்பொழுது வழக்கில் வந்தது என்று தெளிவாகத் தெரிய வில்லை. கடந்த சில நூற்றாண்டுகளாகவே இப்பெயர் வழங்கி வந்துள்ளது. பல எழுத்து வகைகளைப் பற்றியும் அதன் பெயர்களைக் குறிக்கும் 'சமவயங்க சுத்த' என்ற சமண நூலோ 'லலித விஸ்தரம்' என்ற பௌத்த நூலோ, இப்பெயரைக் குறிக்கவில்லை.

அக்காலத்தில் தமிழகத்தில் வடமொழியை எழுத வழங்கிய எழுத்தும், தெலுங்கு - கன்னட பகுதியில் நிலவிய எழுத்தும் ஒன்றுபோலவே இருந்தன. ஆதலின் இவ்வெழுத்தையே திராவிடி என்று அழைத்தனர். கிபி. 7ஆம் நூற்றாண்டில் இருந்து தெலுங்கு கன்னட எழுத்துகளும், கிரந்த எழுத்துகளும் தனித்தனியாகப் பிரியத் தொடங்கின. தமிழ்நாட்டில் தமிழ் எழுத்துக்களின் அமைதியைப் பின்பற்றி இவ்வெழுத்துகள் வளர்ந்தன. திராவிடியில் இருந்து பிரிந்து தமிழ் எழுத்தின் அடிப்படையில் தமிழகத்தில் வளர்ந்த இவ்வெழுத்தைக் கிரந்தம் என்று அழைக்கிறோம்.

தமிழி கல்வெட்டுகளில் பிராகிருதச் சொற்களை எழுத பயன்படுத்தப்பட்ட வடமொழி எழுத்துகளே கிரந்த எழுத்துகளின் முன்னோடிகள் எனலாம். தமிழகத்தில் பல குகைகளிலுள்ள கல்வெட்டுகளில் 'ஸ' என்னும் வடஎழுத்தும் 'த' என்னும் வர்க்க எழுத்தும் காணப்படுகின்றன. அரிக்கமேட்டில் நடந்த அகழாய்வில் எழுத்துகள் பொறித்த பானை ஓடுகள் கிடைத்துள்ளன. இவை

கி.பி. 2-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை. இவற்றில் தமிழ் எழுத்துகளும் சாதவாகனர் எழுத்துகளை ஒக்கும் வர்க்க எழுத்துகளும் உள்ளன. இவையே கிரந்த எழுத்துகளின் முன்னோடிகளாகும்.

பல்லவர் காலத்திலிருந்து கிரந்த எழுத்துகளின் வளர்ச்சியைத் தொடர்ந்து கி.பி. 3-ஆம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து ஆட்சி செலுத்திய பல்லவ மன்னர்கள் கன்னட - ஆந்திர மாநிலங்களின் தென்பகுதிகளையும் தமிழகத்தின் வடபகுதியையும் ஒன்றிணைத்து ஆண்டு வந்தனர். ஆதலின் இம்மாநிலங்களின் மொழிகளும், எழுத்துகளும் இணைந்து திராவிட எழுத்தாகவும், மொழியாகவும் வளர இவர்கள் அடிகோலினர் எனலாம்.

தகடூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட அதியர்களில் கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் சிறந்தவன் சோமன் என்னும் அதியேந்திரன் புகழ்பெற்றவனாகும். இம்மன்னன் நாமக்கல்லில் இரு குகைக் கோயிலைத் தோற்றுவித்துள்ளான், இவற்றில் எழில் வாய்ந்த கிரந்த எழுத்துகள் உள்ளன.

சோழப் பேரரசர்களும் கிரந்த எழுத்துகளைப் பயன்படுத்தியுள்ளனர். கல்வெட்டுகளிலும் செப்பேடுகளிலும் அக்கால கிரந்த எழுத்துகளைக் காண முடிகிறது. சோழ மன்னர்களால் வழங்கப்பட்ட செப்பேடுகளின் முத்திரைகளில் கிரந்த எழுத்துகளே உள்ளன. சோழர்களுடைய சாசனங்களைத் தவிர காசுகளிலும் கிரந்த எழுத்துகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. சோழர்களின் காசுகள் பலவற்றில் நாகரி எழுத்துகள் வழங்கப்பட்டுள்ளன. ஆயினும் சிலவற்றில் கிரந்த எழுத்துகளும் உள்ளன. மதுராந்தகன், கங்கை கொண்ட சோழன், மலைநாடு கொண்ட சோழன் என்ற பெயர்கள் கொண்ட காசுகளில் கிரந்த எழுத்துகள் பொறிக்கப்பட்டுள்ளன. விஜயநகரப் பேரரசுகளும் அவர்களுக்குப் பின்னர் வந்த நாயக்க மன்னர்களும் கிரந்த எழுத்துகளையே பெருமளவில் பயன்படுத்தியுள்ளனர். கி.பி. 19-ஆம் நூற்றாண்டு வரையிலும் கிரந்த எழுத்துகளின் பயன்பாடு இருந்து வந்துள்ளமை அறிய முடிகிறது.

**தமிழ்க் கல்வெட்டுகள்:-**

இராசராசன் மெய்க்கீர்த்தி

**"திருமகள் போலப் பெருநிலச் செல்வியுந்**
**தனக்கே உரிமை பூண்டமை மனக் கொளக்**
**காந்தளூர்ச் சாலைக் கலமறுத் தருளி**
**வேங்கை நாடும் கங்க பாடியும்**
**நுளம்ப பாடியும் தடிகை வழியுங்**
**குடமலை நாடுங் கொல்லமும் கலிங்கமும்**
**எண்டிசை புகழ்தர ஈழ மண்டலமும்**
**இரட்டபாடி ஏழரை யிலக்கமும்**
**திண்டிறல் வென்றித் தண்டாற் கொண்ட**
**தன்னெழில் வளரூழியு ளெல்லா யாண்டுந்**
**தொழுதக விளங்கும் யாண்டே செழியரைத்**
**தேசு கொள் கோராச கேசரி வர்மரான**
**ராச ராச தேவர்க்கு யாண்டு....**